**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 223/2015**

**பிரதிவாதி தரப்பு சாட்சி-2 தங்கராஜ் திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 29.07.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. யார் என்னை அழைத்து வந்தது என்றால் பிரதிவாதிகள் அழைந்து வந்தனர். பிரதிவாதிகள் என்னை சாட்சியளிக்க அழைத்த பின்னிட்டுதான் இந்த வழக்கு விபரம் தெரியுமா என்றால் ஆமாம். எனது சாட்சிய பிரமாணத்தில் உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கு எந்த சர்வே எண்ணிற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் இவ்வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. நான் சிமென்ட் வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் வட்டி தொழில் செய்கிறேனா என்றால் இல்லை, மணப்பாறையில் வட்டி தொழில் செய்பவர்களுடன் சேர்ந்து பணம் வசூல் செய்கிறேன். பணம் வசூல் செய்வதற்கு எனக்கு சம்பளம் தருவார்களா என்றால் ஆமாம். கடந்த வருடம் வாதி மணி என்னிடம் சிமென்ட் எடுத்தது சம்பந்தமாக எனக்கும், அவருக்கும் பிரச்சினை ஏற்பட்டதா என்றால் இல்லை.

2) எதற்காக வழக்கு போட்டுள்ளார்கள் என தெரியுமா என்றால், கோயில் பிரச்சினை தொடர்பாக வழக்கு போட்டுள்ளார்கள். தாவா சொத்தில் கோவில் உள்ளதா என்றால், தாவா சொத்தில் அருகில் உள்ள கோவில்களுக்கு படையல் போட்டு எடுத்து செல்வார்கள். நான் சொல்வது போல் தாவா சொத்தில் பூஜை செய்ததற்கான புகைப்படங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால், நான் செய்யவில்லை, அவர்கள் செய்துள்ளார்களா என்று தெரியவில்லை. தாவா இரண்டு அயிட்டங்களை கொண்டது என்றால் சரிதான், அதில் முதல் அயிட்டம் வீடு என்றால், இரண்டாவது அயிட்டம் வாதி மணியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல, அதில் கோவில் உள்ளது, கோவில் என்றால் கட்டிடமாக இல்லை, கற்கள் பதித்து பூஜை செய்யப்பட்டு வருகிறது.

3) தாவா இரண்டாம் அயிட்ட சொத்தில் தேக்கு மரங்கள், தென்னை மரங்கள், வாகைமரம், பூவரச மரம் ஆகியவை உள்ளன என்றால் தென்னை மரங்கள் உள்ளது, நான் தாவா இரண்டாம் அயிட்ட கோயிலுக்குள் சென்றதில்லை. ரோட்டில் இருந்து பார்த்தால் தெரியும். நான் வேறு சமுதாயத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். எனக்கு வழக்கு பற்றிய முழு விபரமும் தெரியாது என்றால் சரியல்ல. வாதிக்கும், எனக்கும் சிமென்ட் வாங்குவது

சம்பந்தமாக பிரச்சினை உள்ளதால், அதன் காரணமாக அவருக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**